# IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE, TIRUVANNAMALAI.

## O.S. NO.31/2013

**10.01.2023 - வா.சா. 1 ஜனார்த்தனர் சத்திய பிரமாணத்தின் பேரில் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

வா.சா.ஆ. 38 உத்தரவு STAT பிறப்பிக்கப்பட்டதாகும். வா.சா.ஆ.38 கடைசி உத்தரவா என்றால் மற்றொரு உத்தரவும் பிறப்பிக்கப்பட்டுள்ளது. என்னுடைய நிருபண வாக்குமூலம் தாக்கல் செய்தபிறகு நான் STAT ல் மேல்முறையீட்டில் உத்தரவு போடப்பட்டுள்ளது. R.V. ஜனார்த்தனன் என்ற என் பெயருக்கு பெயர்மாற்றம் செய்யப்பட்டுள்ளது. நான் சொல்வது போல் எந்த உத்தரவும் பிறப்பிக்கப்படவில்லை என்றால் சரியல்ல. ஆரம்பத்தில் தாவாவில் பஸ்சையோ அதன் வழித்தடத்தையோ சேர்க்கவில்லை. பின்னிட்டு தான் சேர்த்தேன். மேற்சொன்னவையைதான் தாவா 12ம் அயிட்டமாக சேர்த்துள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள ரிப்ளை ஸ்டேட்மெண்டில் பஸ் குடும்ப சொத்து என்றும், குடும்ப நன்மைக்காக வாங்கப்பட்டது என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். குடும்ப உறுப்பினர் என்ற முறையில் பொறுப்பிற்காக என் பெயருக்கு பஸ்சை மாற்றியுள்ளேன். இன்றும் பஸ் வழித்தடத்தில் ஓடுகிறது. கலெக்ஷன் இல்லை. லாபம் இல்லாத பஸ்சை எதற்கு என் பெயரில் மாற்றம் செய்து கொண்டேன் என்றால் குடும்ப சொத்து என்பதால் என் பெயருக்கு மாற்றம் செய்து கொண்டேன். பஸ் நஷ்டத்தில் ஓடுகிறது என்று தீர்ப்பாயத்தில் நான் சொல்லவில்லை. என் அப்பா எழுதி வைத்ததாக சொல்லும் உயிலின் அடிப்படையில் தான் தாவா சொத்தில் எனக்கு உரிமையுள்ளதாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன். வா.சா.ஆ.6 என் தகப்பனார் எழுதியதாக சொல்லும் உயிலில் என் தாயார் அவர் பெயரில் உள்ள அனைத்து சொத்துக்களையும் தன் மகள்களுக்கு எழுதி வைத்து விட்டதால் அதன் கோபத்தில் எழுதி வைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ. 6 என் தகப்பனார் வெங்கடேசன் நாயுடுவிற்கு அவர் பெயரில் சொத்து இருப்பதாக சொல்லப்படவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.6 வெங்கடேச நாயுடு எழுதவில்லை என்றும், போலீயாக தயாரிக்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.6ல் குறிப்பிடப்பட்டுள்ள அசையும் சொத்தான பேருந்தும் அவர் பெயரில் இல்லை என்றும் சொன்னால் என் தகப்பனார் தான் பணம் கொடுத்து என் தாயார் பெயரில் வாங்கியுள்ளார். நான் சொல்வது போல் என் தகப்பனார் பணம் கொடுத்து என் தாயார் பெயரில் எந்த சொத்தும் வாங்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.6ல் நான் சொல்வது போல் என் தகப்பனார் எழுதியதாக சொல்லும் உயிலில் இடம்பெறவில்லை என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.6 ஐ பொய்யாக தயாரித்து இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. பொய்

வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்று சிறப்பு செலவு தொகையுடன் தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

ஒம்/- ஜனார்த்தனன்

Taken down by me in Open Court read over ot the witness and to knowledged by him/her as correct

Sd/- Irusan Poonguzhali,
Additional District Judge,
Tiruvannamalai.